[1995 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 385, திரு. கா.பூ. முனுசாமி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்.

385—

சென்னை பறக்கும் விமானப் பயிற்சிக் குழுமம்

80009*—திரு. கா. பூ. முனுசாமி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பறக்கும் விமானப் பயிற்சிக் குழுமத்தை அரசே விரைவில் ஏற்று நடத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): சென்னை பறக்கும் விமானப் பயிற்சி குழுமத்தை சிறந்த முறையில் செயல்படுத்த புதுதில்லியிலுள்ள விமானப் பயிற்சி இயக்ககமும், மைய அரசின் விமான போக்குவரத்துத் துறையும் நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி அளிக்க முன்வந்தால் இப்பயிற்சிக் குழுமத்தை மாநில அரசின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரலாம் என அரசு முடிவெடுத்துள்ளது. விமானப் போக்குவரத்து இயக்ககத் தலைவரிடமிருந்து பதில் வந்துள்ளது. இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குழுமத்தினுடைய இன்ஸ்பெக்டராக இருப்பவர், நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்தவர் அல்ல. அவர், வேறு மாநிலத்தைச் சேர்ந்தவராக இருக்கிற காரணத்தினால், சுயநலம் கருதி, அங்கே பயிற்சி செய்ய வருகின்ற மாணவர்களை, தமிழ் மாணவர்களாக வருகின்றபட்சத்தில், 2 மணி நேரம் அல்லது, 3 மணி நேரம் அவர்களைப் பறக்கவிட்டு, நீங்கள் தகுதியில்லாதவர்கள் என்று அவர்களை வெளியேற்றிவிட்டு அந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு முக்கியத்துவம் அளித்து அங்கே அவர்களுக்கு பயிற்சி அளிக்கிறார்கள். இதன் காரணமாக, வருங்காலத்தில் கமர்ஷியல் பைலட்ஸ் ஆக மாறுகின்றவர்கள் நம்முடைய

மாநிலத்திலே இருந்து நிறைய வராமல் இருப்பார்கள். எனவே இதைக் கருத்தில் கொண்டு இந்தப் பயிற்சிக் குழுமத்தை உடனடியாக அரசே ஏற்று நடத்த நடவடிக்கை எடுக்கப்படுமா? மேலும், இன்றைக்கு அரசு சார்பாக வருடத்திற்கு குறைந்தது 10 லட்சம் ரூபாய் நிதி அளிப்பதாக அறிகிறேன். எனவே, இந்தக் குழுமத்தை அரசே எடுத்து நடத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி அளிப்பதிலே நமக்கு அங்கே எந்தப் பிரச்சினையும் இல்லை. அங்கு பயிற்சி அளிக்கக்கூடிய ஒருவர், ஜார்ஜ் என்பவர் நீண்ட நெடுங்காலமாக விடுப்பிலே சென்று விட்டார். ஆகவேதான் அந்த கிளப் மூடப்பட்டது. ஆனாலும் கூட, அதற்குப் பிறகு தற்காலிகமாக ஸ்ரீதர் என்பவரை நியமித்தோம். அவருக்கு நாள் ஒன்றுக்கு 500 ரூபாய் ஊதியம் வழங்கப்பட்டது. அவரும் குறிப்பிட்ட நாளுக்குப் பிறகு அங்கே பணிகள் செய்யவில்லை; அந்தப் பயிற்சியை அவர் அளிக்கவில்லை. இருந்தாலும் கூட நான் முதலிலே பதில் சொல்கிறபோது, மத்திய அரசிடமிருந்து நிதி தந்தாலொழிய, இந்தக் கிளப்பை சிறப்பான முறையிலே செயல்படுத்த முடியாது என்பதை நான் உங்களிடத்திலே சுட்டிக்காட்டி இருக்கிறேன். ஆகவே, மத்திய அரசிடமிருந்து நிதியை எதிர்பார்த்து, இதைச் சிறப்பான முறையிலே நடத்துவதற்கு நாங்கள் கடிதங்கள் எழுதி இருக்கிறோம்; மத்திய அரசும் அதைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

திரு. கா.பூ. முனுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மைய அரசு அனுமதி அளித்து, இதை மாநில அரசே ஏற்றுக் கொண்டால், மாநில அரசின் வாயிலாக வருங்காலத்திலே ஏர்கிராப்ட்ஸ் வாங்குவதற்குரிய வாய்ப்பு இருக்கும் பட்சத்தில், இந்த ஏர்கிராப்ட்ஸ்ஸை நிறுத்துவதற்கு இந்தக் குழுமமே போதும் என்று கருதுகிறேன். காரணம் அந்தப் பகுதியிலேயே அந்தக் குழுமத்திற்குச் சொந்தமாக ஹேங்கர் இருக்கின்ற காரணத்தினாலே அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும், அவ்வாறு தமிழக அரசே இதை ஏற்றுக்கொள்கின்ற நேரத்தில், பயிற்சி அளிக்கப்படுகின்ற மாணவர்கள் இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலே சேர்க்கப்படுவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நிலப்பரப்பினுடைய

[*1995 ஏப்ரல் 21*

சொத்தின் மதிப்பு *38,27,268* ரூபாய்; அதனுடைய கட்டிடத்தின் மதிப்பு *38,87,268* ரூபாய் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்தக் கிளப்பிலே *28* பேர் பணியாற்றிக்கொண்டு இருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாநில அரசு ஒரு விமானத்தை வாங்கப் போகிறது; ஆகவே, அந்த இடத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கேட்டார்கள். அது வேறு, இது வேறு. இது பயிற்சி அளிக்கின்ற விமானம். இது ஒரு சிறிய இடத்திலேதான் இருக்கிறது. இருந்தாலும் கூட அந்த விமானத்தை எப்படி சிறப்பான முறையிலே இயக்குவது என்பது பொதுத் துறையில் இருக்கிறது. இருந்தாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மனதிலே கொண்டு இந்த அரசு விரைந்து சில நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சென்னை பறக்கும் விமான பயிற்சிக் குழுமத்தை மாநில அரசு ஏற்று நடத்துகின்றபோது—இன்றைக்கு விமான ஓட்டுனர்களாக இருப்பவர்கள் எல்லாம் வட மாநிலத்தைச் சேர்ந்தவர்களாகவும், மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர்களாகவும் அதிகமாக உள்ளார்கள்; தமிழகத்தைச் சேர்ந்த தமிழ் மொழி பேசுகிறவர்கள் இன்றைக்கு விமான ஓட்டுனர்களாக அதிகம் இல்லாத காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அப்படிப்பட்ட இந்தப் பயிற்சியைத் தொடர்ந்து நடத்துகின்றபோது, தமிழகத்தைச் சேர்ந்தவர்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து, விமான ஓட்டுனர்களாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்களா? அப்படி எடுக்கின்றபோது, இப்போது இருக்கின்ற அந்தப் பயிற்சி அளிக்க பயிற்றுனராக நியமிக்கப்படுபவரையும் தமிழராகவே நியமிக்கப்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி அளிப்பதிலே தமிழர், மற்ற மாநிலத்தைச் சேர்ந்தவர் என்ற வேறுபாடு இருக்க முடியாது. ஆனால், பயிற்சி அளிப்பதற்குக் கூட முன்னுரிமை தமிழ்நாட்டிலே இருக்கிற மாணவர்களுக்கு வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். அதேபோல இங்கே *7* விமானங்கள் இருக்கின்ற காரணத்தினாலே அங்கே எவ்வளவு பேர் வந்தாலும் பயிற்சி

1995 ஏப்ரல் 21]

அளிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால், நிதிப் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினாலும், மத்திய அரசினுடைய கட்டுப்பாட்டிலே இருக்கின்ற காரணத்தினாலும்தான் நாம் அதை செயல்படுத்த முடியவில்லை. அதைத்தான் நாம் மத்திய அரசிடத்திலே இருந்து தெரிந்துகொள்ள இருக்கிறோம். மத்திய அரசு அதற்கு அனுமதி தந்தால், அதற்குப் பிறகு மாநில அரசு அதை ஏற்று நடத்த முடியுமா என்பதை அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்.

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மெட்ராஸ் ஃபிளையிங் கிளப்பில் பெண்களை பயிற்றுவிக்கும் திட்டம் உள்ளதா? அப்படி பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கும்போது, பெண் இன்ஸ்ட்ரக்டர்கள் நியமிக்கின்ற திட்டம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே.ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிற்சி நிறுத்தப்பட்டு இருக்கிறது. அதற்குப் பிறகுதான், பெண்களுக்கு பயிற்சி அளிப்பதா என்பது பற்றி முடிவு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி.கே. சின்னசாமி.

திரு. வி.கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்தப் பயிற்சி பெற்று உள்ளாரா? (சிரிப்பு) எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தப் பயிற்சி பெறுவதற்கு விரும்பினால், விமானம் ஓட்டுகின்ற பயிற்சி பெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து எங்களுக்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவருக்கு என்னென்ன பயிற்சி இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். உங்களுக்கு எப்படிப்பட்ட பயிற்சி கொடுத்தால் சரியாக வரும் என்பதும் தெரியும்.

வினா எண் 386, திருமதி அ.தி. சரஸ்வதி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.